பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஞூ சித்திரை 19 ம் வியாழக்கிழமை [02—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 149

# கடனுதவி பெறுவதற்காகவே அரசாங்கம் பேச்சு "வேஷம்"!

## அதன் இராணுவவாத நிலையை ஏற்க முடியாது என்கிறார் மாத்தயா

யாழ்ப்பாணம், மே 2

தமிழீழ மக்களின் நலனை, நல்வாழ்வை, பாதுகாப்பை உறுதிப்படுத்தும் எந்தத் தீர்வைப்பற்றியும் பேசுவதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம்.

ஆனால் அரசாங்கம் அந்நியக் கடனுதவி பெறுவதற்காகவே, பேச்சுவார்த்தை என்றும், சமாதானத் தீர்வு என்றும் வேஷம் போடுகிறது.

நேற்றுப் பிற்பகல் நல்லூர் ஆலய வீதியில் திரண்டிருந்த லட்சக் கணக்கான மக்கள் முன் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. மாத்தயா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவ மேலாதிக்க நிலையில் இருந்து கொண்டு பேச்சுக்களை நடத்தலாம்— அதன் மூலம் எம்மீது புதிய அழுத்தங்களையும், நிர்ப்பந்தங்களையும் விதிக்கலாம் என்று அரசு நினைக்கிறது—

அரசின் இந்த இராணுவவாத நிலையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது— என்றும் திரு. மாத்தயா கூறினார்.

அவரது உரையின் முழு விவரமும் வருமாறு:-

இந்தத் தேசத்தை ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்து சுதந்திரமாக வாழ்வதற்கா

[5-ஆம் பக்கம் பார்க்க]



## நேற்றும் ஷெல் தாக்கு

ஊர்காவற்றுறை இராணுவத்தினர் நேற்று மாலையும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

அனேக ஷெல்கள் வேலணை வங்களாவடி, சாட்டிப் பகுதிகளில் விழுந்து வெடித்தன. (ஓ-131-15)

## வெளிநாட்டவர் யாழ். வர அரசு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், மே 2

"இந்த மாபெரும் பேரணியை வெளிநாட்டவர் பார்வையிட்டால் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்பதைக் கண்டு உணர்வார்கள்; அவர்கள் அதனை வெளிநாட்டிலும் பிரசாரம் செய்வார்கள். அதனைத் தடுக்கவே ஸ்ரீலங்கா அரசு வவுனியாவில் அவர்களுக்குத் தடை விதித்தது"

— இவ்வாறு நேற்று நல்லூரில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா கூறினார்.

இதே வேளை—

வடக்கு நோக்கி வந்த— இந்தியப் பத்திரிகையாளர்கள் இருவர் உட்பட எட்டு வெளிநாட்டவர்களை— நேற்றுக் காலை வவுனியா தாண்டிக்குளப் பகுதியில் வைத்துப்படையினர் திருப்பி அனுப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

# தமிழீழ வரலாறு காணாத மே தின எழுச்சிப் பேரணி

## மருதனார்மடம் முதல் நல்லூர் வரை சனசமுத்திரம்

யாழ்ப்பாணம், மே 2

தமிழீழவரலாறு காணாத மக்கள் கலந்துகொண்ட மாபெரும் மேதினப் பேரணி நேற்றுக்காலை 9-30 மணியளவில் மருதனார் மடத்திலிருந்து ஆரம்பமானது.

பேரணியில் கலந்துகொள்வதற்காக குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல ஊர்வலங்களும் ஊர்திகளும் நேற்றுக்காலை முதல் மருதனார் மடம் பகுதிக்கு வந்து சேரத் தொடங்கின.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுப்பகுதி ஆகிய இடங்களைச்சேர்ந்த ஊர்திகளும், அணிவகுப்புகளும் பேரணியில் காணப்பட்

[2-ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் குண்டுவீச்சு!

வவுனியா பகுதியில் மேதினமான நேற்றுக் காலையும் நண்பகலிலும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

காலை 7 40 மணியளவில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் கோழிபகுளம் பகுதியில் நான்கு குண்டுகளை வீசின. இதனால் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்தது.

நண்பகல் 1 35 மணியளவில் இதே பகுதியில் மீண்டும் இரு குண்டு வீச்சு விமானங்கள் நான்கு குண்டுகளை வீசின. ஒரு வீடு சிறிது சேதமுற்றது.

இதே சமயம்—

நேற்று முன்தினம் மாலை

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அவர்களின் தேவை கருதி நாம் பேச்சுக்குப் போகமாட்டோம் - யோகி

யாழ்ப்பாணம், மே 2

சிங்களத் தலைவர்களுக்குத் தேவைப்படும்போது பேச்சுவார்த்தை என்ற குரலெழும். ஆனால் நாம் தேவை கருதி பேச்சுவார்த்தைக்கு போகப் போவதில்லை உரிமை கருதி, போராட்ட வெற்றி கருதியே பேச்சுவார்த்தைகள் நடப்பதுண்டு.

— இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் திரு. யோகரத்தினம் யோகி.

நல்லூரில் நேற்று நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்

[2-ஆம் பக்கம் பார்க்க]



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மேதின எழுச்சிப் பேரணியின் சில காட்சிகள். (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வல்லிபுரம் மயில்வாகனம்

தோற்றம்: 27 - 04 - 1918  மறைவு: 14 - 04 - 1990

திதி: 02 - 05 - 1991

[சாவகச்சேரி லேக்கவுஸ் பத்திரிகை முகவர்]

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து ஓர் ஆண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு எம் உயிர் உள்ளவரை நீங்காது.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரன், உற்றார், உறவினர்கள்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. [16635]

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் நடராசா ரஞ்சினிதேவி

(சோதி)

பிறப்பு: 03 — 05 — 1958  இறப்பு: 13 — 05 — 1990

திதி: 02 - 05 1991

ஆண்டொன்று சென்றதம்மா நீயின்றி
ஆனாலும் வாழுகின்றாய் எம் நெஞ்சமதில்
உன் குரல் கேட்டு மலர்ந்திருந்த உன் குடும்பம்
உன் சுவடுமின்றி ஏங்குதம்மா எந்நாளும்
பாதியிலே எம்மைவிட்டு போய்விட்டாய்
பாசத்தை நாம் காட்ட யாருமில்லை,
இறையடியே நிஜமென்று எண்ணினாயோ சோதி?
இன்றல்ல என்றும் நீ இருப்பாய் எம் நெஞ்சமதில்

குடும்பத்தினர்.

உடுவில் கிழக்கு,
உடுவில். [4047]

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

[அம்பாள் கபே முல்லைத்தீவு]

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை 29-4 91 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

இவர் காலஞ் சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற கோபாலபிள்ளை, உலகநாதன், காலஞ் சென்ற சப்இன்ஸ்பெக்டர் புண்ணியமூர்த்தி, இலட்சுமணன் [ஜேர்மனி] மங்கையர்க்கரசி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேசு (நியூ அம்பாள் கபே முல்லைத்தீவு), பேரம்பலம் [பிரபல கொழும்பு வர்த்தகர்], புவனேஸ்வரி, திலகவதி, விக்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 30-4 91 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவில் நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அன்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
புங்குடுதீவு-8  கோ. துரைராஜசிங்கம் [16652]

## தமிழீழ வரலாறு காணாத...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி] டன.

உள்ளூர் உற்பத்தி சுய பொருளாதாரம், தமிழீழ மக்களின் விடுதலை உணர்வுகள், ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறை வடிவங்கள், தமிழீழ தேசிய பொருளாதார வளங்கள், வீரமரணமடைந்த தியாகிகளின் உருவப்படங்கள் என்பன வற்றை சித்திரிக்கும் அலங்கார ஊர்திகள் பேரணியில் நீண்ட வரிசையில் காணப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவு, கட்டுறவாளர்கள், உள்ளூராட்சித் திணைக்களம், வங்கி ஊழியர்கள், கடற்றொழில் அமைப்பினர், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகப்பகுதி அமைப்புக்கள், சங்கங்கள், ஆசிரியர்கள், தனியார் நிறுவனங்களின் ஆகியவற்றின் பல்வேறு வகைப்பட்ட எழில் மிகு ஊர்திகள் பேரணியில் இடம் பெற்றன.

விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், சிறுகைத்தொழிலாளர்கள், கட்டுறவுத்துறையினர், கலைஞர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், வங்கியாளர்கள், கூட்டுத்தாபன, தனியார் ஊழியர்கள், உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் மற்றும் பல்தரப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் லட்சக்கணக்கில் திரண்டு வந்து பேரணியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பேரணியில் அலங்கரிக்கப் பட்ட மாட்டு வண்டிகளும் அதிகளவில் காணப்பட்டன.

பேரணியில் கலந்து கொண்ட மக்கள் சிவப்பு மஞ்சள் நிற ஆடைகளையும், தொப்பிகளையும், பட்டிகளையும் அணிந்திருந்தனர்.

ஏராளமான சுலோகங்களும் பதாகைகளும் கொடிகளும் பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டன.

ஊர்வலத்திலும் மேதினக் கூட்டத்திலும் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டதாக மதிப்பீடு செய்யப்பட்டது.

மருதனார்மடத்தில் ஆரம்பித்த பேரணியின் முன்னணி வரிசை நல்லூரை வந்தடைந்த பின்னரும் மருதனார் மடத்தில் பேரணியில் மக்கள் சேர்ந்த வண்ணம் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

ஊர்திகள் வந்த பாதையில் அமைக்கப்பட்டிருந்த விசேட பந்தல்களில் வைத்து பேரணியில் வந்தோருக்கு குளிர் பானங்கள் வழங்கப்பட்டன. மக்களும் தமது வீடுகளுக்கு முன்னால் வைத்து குளிர் பானங்கள் வழங்கிக்கொண்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

பொதுக்கூட்டம் நடைபெற்ற நல்லூர் கோவில் பகுதியில் காலை முதல் மக்கள் திரளத் தொடங்கினர்.

தூர இடங்களில் இருந்து கால்நடையாகவும், சைக்கிள்களிலும், மாட்டு வண்டிகளிலும் மக்கள் வருகை தந்ததை அவதானிக்க முடிந்தது.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதிப் பக்கமாக — திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடத்தில் — அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான மேடையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

விமானத் தாக்குதல்கள் நடக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதனைப் பொருட்படுத்தாது மக்கள் சமுத்திரம் நல்லூரில் திரண்டிருந்தது.

விமானத் தாக்குதல்களை எதிர்கொண்டு — மக்களைப் பாதுகாக்கும் முன்னேற்பாட்டு நடவடிக்கையாக — நல்லூரைச் [illegible] வுள்ள இடங்களிலும் மற்றும் ஊர்வலம் வந்த பாதைகளுக்கு அண்மையிலும் ஆங்காங்கே விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட வாகனங்கள் சகிதம் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் தயார் நிலையில் நின்றதைக் காண முடிந்தது.

பிற்பகல் 1-15 மணியளவில் பேரணி நல்லூரை வந்தடையத் தொடங்கியதும் பொதுக்கூட்டம் ஆரம்பமானது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் திரு. மாத்தையா, யோகரட்ணம் யோகி, வே. பாலகுமாரன், யாழ்ப்பாண மாவட்டத் தளபதி தினேஷ், மகளிர் முன்னணியைச் சேர்ந்த ஜெயா மற்றும் தொழிலாளர் சார்பில் அருமைத்துரை, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த. மகாசிவம் ஆகியோர் கூட்டத்தில் உரையாற்றினர்.

[இ-90-3-5-15-68-89]

## அவர்களின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கண்டவாறு தெரிவித்தார்.

திரு. யோகி தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய போராட்ட சூழ்நிலையிலும் கூட நாம் வழமையான விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு பலன் கண்டுள்ளோம். புகையிலை, வெங்காயம் பயிரிட வேண்டாம் என்று நாம் கூறவும், அதனைப் பொருட்படுத்தாது அவற்றைப் பயிரிட்டு அறுவடை செய்துவிட்டு பேச்சுவார்த்தைக்காக சம்பந்தப்பட்ட விவசாயிகள் காத்திருக்கிறார்கள். பேச்சுவார்த்தைகள் உரிமைக்காக — போராட்ட வெற்றிக்காக — நடப்பவை. தேவை கருதி நடப்பவையல்ல.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தவும், வெளிநாட்டில் உதவி பெறவும், சிங்களத் தலைவர்களுக்குப் பேச்சு

[5 ஆம் பக்கம் பார்க்க]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 07 — 06 — 1929



மறைவு: 02 — 04 — 1991

### அமரர் முருகேசு கார்த்திகேசு

நோய் தீர்க்கவென்று சொல்லிக்
கொழும்பு மாநகர் சென்றீர்
குறையொன்றும் இல்லாமல் தானே
நீர் இருந்தீர் - ஐயா
மனையாள் ஓடிவந்து பார்க்க முன்னர் கூறாமல்
சென்றுவிட்டீர் - நாட்டுக்குழப்ப நிலை -
நாமென்ன செய்வோம்
உற்றாரும் ஊராரும் உம்பிரிவால் வாடுகின்றார்
சுற்றோரும் மற்றோரும் உம்பெருமை பேசுகின்றார்.
மீளாத்துயில் கொண்டீர்! சாந்தி பெறுவீர்!
ஓம் சாந்தி! சாந்தி!

(முடக்காடு, சாமியன் அரசடியில் உள்ள இல்லத்தில் இன்று [02 - 05 - 1991] பகல் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
மற்றும் குடும்பத்தினர்.

முடக்காடு, சாமியன் அரசடி,
கரவெட்டி. (16611)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 5 5-1920

மறைவு: 17 4-1986

திதி: 2-5 1991

### அமரர் மாணிக்கம் பொன்னுத்துரை

[பிரபல வர்த்தகர், பண்டத்தரிப்பு]

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
உமது நினைவுகள் எமது இதயங்களில்
நிலைத்து, நிறைந்து சுடர் விடுகின்றன.

நினைவு கூரும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரர்கள் பெறாமக்கள்,
உறவினர்கள் நண்பர்கள்.

இந்துக் கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு. [16642]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனும் பாணும் சாப்பிட்ட ஐவர் ஆஸ்பத்திரியில்

அவித்த மீனும், பாணும் சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் வாந்தி பேதிக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

குருநகரைச் சேர்ந்த திருமதி குமாரி [வயது 38] அவரது பிள்ளைகளான ஜஸ்டின் [வயது12] டெய்சி [வயது9] றோகன் [வயது 5] நிசாந்தினி [வயது 2] ஆகியோரே அந்த ஐவரும் ஆவர்.

உணவில் இருந்த நச்சுத்தன்மையே வாந்திபேதிக்குக் காரணம் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ 15]

## காரைநகர் ப. நோ. கூ. ச. கிளைகள் வழக்கம்பரையில்

நவாலி, மே 2

காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தின் கீழுள்ள 16 கிளைகளும் வழக்கம்பரை அம்மன் கோவிலடியில் தற்போது இயங்கி வருகின்றன.

இக் கிளைகள் வழக்கம்பரை அம்மன் கோவில் மடத்திலும், பண்ணாகம் உபதபால் நிலையம், சங்கானை ப. நோ. கூ. சங்கக் கிளைக் கட்டடம் ஆகியவற்றில் இரு கிளைகள் வீதம் இயங்குகின்றன.

இக் கிளைகளில் தற்போது உலர் உணவு விநியோகம் விடுமுறை நாட்களிலும் இடம்பெறுகிறது.

இவற்றைப் பெறுவதற்கு மக்கள் கூட்டம் கூட்டமாக நிற்பதைக் காண முடிகிறது.

காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் மூளாய் பிள்ளையார் ஆலயம், தொல்புரம் நெசவு நிலையம், வழக்கம்பரை அம்மன் கோவில் ஆகிய இடங்களில் தங்கி உள்ளனர். [இ-100]

## காமினி சாட்சியம்

கொழும்பு, மே 2

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா வெலிஸாட் தொடர்பு பற்றிய விசாரணைக்குழு முன் இன்று சாட்சியமளிக்க இருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டது.

சாட்சியளிக்க உதவும்படி ஆணைக்குழு விடுத்த கோரிக்கையை அவர் ஏற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

# எண்ணெய் அளக்க போலிக் கருவிகள்

### நிறுவை அளவை அதிகாரி எச்சரிக்கை

கொழும்புத்துறை, மே 2

வியாபாரிகள் புதிதாகப் பாவிக்கும் எண்ணெய் அளவுக் கருவிகள் அனேகமானவை போலியானவை.

யாழ். மாவட்ட நிறுவைகள், அளவைகள் பகுதிப் பதில் பொறுப்பு அதிகாரி திரு. கா. நாகலிங்கம் இப்படி எச்சரித்துள்ளார்.

இந்தப் போலி அளவுக்கருவிகள் சட்ட விரோதமானவை என்றும் இவற்றின் அளவு குறைவானது என்றும் அவர் தெரிவித்தார்.

மெற்றிக் நிறுவைகள், மெற்றிக் திரவ அளவைகள் ஆகியவற்றை வியாபாரிகள் வாங்கும்போது அவற்றில் அரச முத்திரை உண்டா என்பதைக் கவனித்து வாங்கும்படியும் அரசாங்க முத்திரையிடப்பட்ட திரவ அளவைகள், நிறுவைகள் ஆகியவற்றை அனுமதி வழங்கப்படாதவர்கள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். [இ-80

## பட்டதாரி ஆசிரியருக்கான கடன் நிபந்தனை தளர்வு

அச்சுவேலி, மே 2

பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் இரண்டு வருடச் சம்பள முற்பணக்கடன் பெறுவதற்கு விதிக்கப்பட்ட நிபந்தனை தளர்த்தப்பட்டுள்ளது.

பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் இரண்டு வருடச் சம்பள முற்பணக்கடன் பெறுவதற்கு வீடு சேதமடைந்ததை உறுதிப்படுத்தி கட்டடத் திணைக்கள பொறியியலாளரின் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என முன்பு நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது.

பொறியியலாளர் அறிக்கை தேவையில்லை என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-11]

## தென் ஆபிரிக்க அரசு மீது மண்டேலா கண்டனம்

கேப்டவுன், மே 2

உறுதியளிக்கப்பட்டபடி அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள கறுப்பின அரசியல்வாதிகளுக்குத் தண்டனை தவிர்ப்பு வழங்கவும் முன்வராததற்காக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா தென் ஆபிரிக்க அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

விடுதலை கோரி அரசியல் கைதிகள் சிறையில் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிப்பின், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அதற்கு ஆதரவளிக்கும் என்றும் டாக்டர் நெல்சன் மண்டேலா சொன்னார்.

அரசியல் கைதிகள் விடுதலையாவதில் ஏற்படும் தாமதத்திற்கு ஆபிரிக்க தேசியக் காங்கிரஸின் போக்கே காரணம் என்று தென் ஆபிரிக்க அரசு குற்றஞ்சாட்டியுள்ளது. [இ-எ]

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 2

"பாபா சொன்ன கதைகள்" என்னும் நூல் வெளியீடு எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3-00 மணிக்கு தாவடி பிள்ளையார் கோவிலடி நிகழ்ச்சி மண்டபத்தில் இடம்பெறும்.

## காளான் வளர்ப்பில் இலவசப் பயிற்சி நெறி

கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடத்தில் காளான் வளர்ப்பு வெற்றி அளித்துள்ளதைத் தொடர்ந்து அனைவரும் தெரிந்து பயன்பெறும் வகையில் காளான் வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி வகுப்புக்கள் இலவசமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாதத்தில் இரண்டாம், நான்காம் சனிக்கிழமைகளில் காலை 9-00 மணிக்கு இப் பயிற்சி வகுப்பு ஆரம்பமாகும்.

காளான் வளர்ப்பில் ஆர்வம் கொண்டோர், தலைவர், உயிரியற்றுறை, விவசாய பீடம், கிளிநொச்சி என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு பயிற்சி வகுப்பு சம்பந்தமான மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு நாளில் ஆகக்கூடியது 20 பேருக்கு மட்டுமே இப் பயிற்சி வகுப்பு நடத்தப்படும்.

ஆகவே பயிற்சிவகுப்புகளில் கலந்து கொள்ள விரும்புவோர் முன்கூட்டியே மேற்கூறிய விலாசத்துக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அத்துடன் தமக்கு தேவையான காளான் வித்துக்களையும் இங்கேயே நேரில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## பளை பிரசவ விடுதியில் பிரசவத் தாய்மார் சிரமம்

தென்மராட்சி, மே 2

பளை பிரசவ விடுதிக்கு வரும் பிரசவத் தாய்மார்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இயங்கும் பிரசவ அறைக் கட்டடம் காற்றோட்டம் இல்லாதது என்றும் பிரசவ வேதனையுடன் வரும் தாய்மார்கள் நீண்ட நேரம் மரங்களின் கீழ் நிற்கும் நிலைமை இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரசவ விடுதி மீண்டும் பழைய இடத்துக்கு இடம் மாற்றப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. [இ-117]


யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை

### கேள்விப் பத்திர அறிவித்தல்

### 1000 பதக்கங்கள் வழங்கல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழக' இலச்சினை பொறிக்கப்பட்ட துருப்பிடிக்காத உருக்குத் தகட்டில் [Stainless Steel] 5 சென்ரி மீற்றர் விட்டமும் 2 மில்லி மீற்றர் விளிம்புமுடைய 1000 பதக்கங்களை வழங்குவதற்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. தகட்டின் கனம் 18 முதல் 20 கேச் இருத்தல் வேண்டும். பதக்கத்தின் மாதிரிகளை அலுவலக நேரத்தில் பல்கலைக்கழக நிதிக்கிளையில் பார்வையிடலாம்.

கேள்விகள் பின்வரும் விபரங்களைக் கொண்டதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு மீளளிக்கக்கூடிய பிணைப்பணமாக ரூபா 1000 செலுத்திய பற்றுச்சீட்டுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிணைப்பணம் செலுத்தாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

1. கேள்விப் பத்திரதாரர் பெயர் முகவரி.
2. வியாபார அலுவலக முகவரி.
3. தொழில் அனுபவம்:

தெரிவு செய்யப்படும் கேள்விப்பத்திரதாரர் பதக்கங்களை ஒரு மாதத்திற்குள் வழங்க வேண்டும்.

கேள்விகளுக்கு விண்ணப்பிப்போர் கேள்விப் பத்திர தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பதக்கம் வழங்குவதற்கான கேள்விகள்' எனக் குறிக்கப்பட்டு நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு 15-05-91 காலை 10 00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக பதிவு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கேள்விகள் 15-05-91 முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும்.

பதிவாளர்.

[இ-4964]


## கலைஞனின் தூய உள்ளமே அவனை வாழ்விக்கும்

### விருது வழங்கும் விழாவில் உரை

குருநகர் மே 2

'கலைஞனின் அறிவு ஆற்றல் எல்லாவற்றை விடவும் அவனது தூய்மையான உள்ளமே சமூகத்தில் அவனை நிரந்தரமாக வாழவைக்கும்'.

ஒப்பனைக் கலைஞர் திரு. சாமுவேல் பெஞ்சமினுக்கு விருது வழங்கும் வைபவத்தில் கலந்து சிறப்புரை நிகழ்த்திய யாழ். திருமறைக் கலாமன்ற இயக்குனர் பேராசிரியர் வண. நீ. மரியசேவியர் அடிகள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'மகவம் ஏற்பாட்டில் கலைஞரின் இல்லத்தில் கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை திரு வேல் அமுதன் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

கலாநிதி இ. பாலசுந்தரம் 'ஒப்பனைக் கலை வேந்தர்' என்னும் விருதை திரு. சாமுவேல் பெஞ்சமினுக்கு வழங்கிக் கௌரவித்தார்.

பேராசிரியர் வண. சவிரிமுத்து தொடர்ந்து பேசுகையில்:

'திறமைகளால் ஜொலித்த கலைஞனின் பிற்கால வாழ்க்கை உள்ளத் தூய்மையுடன் அவன் மேற்கொண்ட வாழ்வு முறையுமே பேர மக்கள் மனதில் அவனுக்கு நீங்காத ஒரு இடத்தைப் பெற்றுக் கொடுக்கிறது' என்றார்.

வைபவத்தில் கலாநிதி இ. பாலசுந்தரம் எழுதிய 'ஈழத்தில் ஒப்பனைக்கலை' என்னும் கைநூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பேசிய கலாநிதி இ. பாலசுந்தரம் அறுபது ஆண்டுகால அவரது ஒப்பனைக் கலைச் சேவையில் சிறப்பாக மூன்று தசாப்தங்கள் அமைந்தன எனக் குறிப்பிட்டார்.

கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை கவிதை வாழ்த்து வழங்கினார்.

திருவாளர்கள் ஏ. ரி. பொன்னுத்துரை, என். சண்முகலிங்கம், இ. ஜெயராஜ், வி. ஜே. கொன்சன்ரைன், கண்ணாடி இராசரெத்தினம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். [த 51]

## காரைநகர் அகதிகளுக்கு ஒரு வார உலர் உணவு

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகளுக்கு உடனடி நிவாரணமாக ஒருவார உலர் உணவு வழங்கப்பட இருக்கிறது.

தற்சமயம் நடைமுறையில் உள்ள சகலருக்குமான உலர் உணவு நிவாரணத்திட்டத்தின் கீழ் இந்த நிவாரணம் வழங்கப்படவிருக்கிறது.

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் தற்காலிகமாக இயங்கும் காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தின் ஊடாக இந்த நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது. [இ-3]

## தீவுப்பகுதி அகதிகளுக்கு உலர் உணவு

யாழ்ப்பாணம். மே 2

தீவகப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ் நகரப் பகுதியில் 10 முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

யாழ். உதவி அரசாங்க அதிபர் எஸ். ஜ. நித்தியராஜ் தலைமையில் சேவை அதிகாரிகள் முகாம்களுக்கு விஜயம் செய்து உலர் உணவுப் பொருள்களை வழங்கினர்.

அரிசி, சீனி, பருப்பு, பாண்மா, தேயிலை, தேங்காய், மிளகாய்த் தூள் போன்ற உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. [இ-5]

## அஞ்சலிக் கூட்டம்

பூநகரி, மே 2

ஆனையிறவு இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை ஆனந்தனின் [திரு. கமலநாதன்] இறுதி அஞ்சலிக் கூட்டம் நேற்று முன்தினம் 30 ஆம் திகதி பூநகரி சந்தை பொது மைதானத்தில் நடைபெற்றது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் அன்னாரின் புகழுடம்புக்கு அஞ்சலி செலுத்தினர்.

அஞ்சலிக் கூட்டத்தில் பூநகரிப் பகுதி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. [illegible] உட்படப் பலர் உரையாற்றினர். [இ-135]


அமரர் -

### செல்லப்பா விசாகப்பெருமான்

[நயினாதீவு] அவர்களுக்கான ஆத்மசாந்திப்

### பிரார்த்தனைக் கூட்டம்

இடம்: ''உமாபதி'' 57, மல விவீதி, கந்தர்மடம்.

காலம்; 1991 மே மாதம் 3ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணி.

அன்பர்கள் அனைவரும் வருக

ஆத்மசாந்திப் பிரார்த்தனைக் குழுவினர்.

[16533]



### நவாலி வை. எம். சி. ஏ.

நவாலி வை. எம். சி. ஏ. யின் தையல் பயிற்சி வகுப்புக்கள் 4-5-91 காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும். பயிற்சியை முடித்து சான்றிதழ் பெறாதோரும், புதியவர்களும் கலந்துகொள்ளலாம். விவரங்களுக்கு காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

[6016]



### பதவி வெற்றிடங்கள்

### தமிழீழக் காவல்துறை

★ காவலர்

தகைமைகள்;

1. வயது எல்லை: 18 வயது முதல் 30 வயது வரை
2. உயரம்: 5 அடி 6 அங்குலம்
3. கல்வித்தகைமை: எட்டாம் வகுப்பு முதல் க. பொ. த. [சாதாரணம்] க. பொ. த. [உயர்தரம்] வரை

★ கணக்கு லிகிதர்

தகைமைகள்:

1. வயது எல்லை: 25 முதல் 45 வரை
2. கல்வித்தகைமை: கணக்குத்துறையில் குறைந்தது 5 வருட அனுபவம்

★ நிர்வாக உத்தியோகத்தர்

நிர்வாகத்துறையில் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகள் 07-05-1991 இற்கு முன் தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் பிரதேசக் காரியாலயத்தில் சான்றிதழ்களின் பிரதிகளுடன் சமுகமளிக்கவும்.

பொறுப்பாளர்,

தமிழீழக் காவல்துறை.

[ச-100]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## A/L கணக்கியல் கோட்பாடுகள்

A/L கணக்கியல் கோட்பாடுகள் வெளிவந்து விட்டது. ஆக்கியோன் N ராஜன் B. Com விலை 85/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, பிறவுண் வீதி நிலையம் [4085]

## குருமன் நோய்

மிளகாய்ச் செடியைத் தாக்கும் குருமன் நோய்க்கு நீமியாவுடன் சலைவப்பவுடர் கலந்து தெளிக்க கைமேற் பலன். ஏனைய பயிர்களுக்கும் ஏற்றது. பாவனை முறைக்கு தொடர்பு கொள்க: மில்க்வைற் யாழ்ப்பாணம். [சி-4959]

## மணமகள் தேவை

சண்டாளில் நற்பதங்கியும், 7 இல் செவ்வாயுடன் சந்திரனும் உள்ள 30 வயது இந்து மணமகனுக்கு இரசபாவம் குறைந்த, படித்த மணப்பெண் தேவை. குறிப்பு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 310, மே/பா உதயன் யாழ்ப்பாணம். [16644]

## அறிவித்தல்

மாவிட்டபுரம் சிவம் இன்டஸ்ரீஸ் உரிமையாளர் தயவு செய்து உடனடியாக ஸ்ரீலங்கா அச்சகத்தில் சமூகம் தரவும். சிவராமன், ஸ்ரீலங்கா அச்சக உரிமையாளர் [16651]

## வீதி ஓரங்களில் மண்எண்ணெய்

உரும்பராய், மே 2

பல நாட்களுக்குப் பின்பு மண்எண்ணெய் மீண்டும் வீதி ஓரங்களில் வைத்து விற்பனை செய்யப்படுகிறது.

உரும்பராய் கிழக்கு கோப்பாய் வீதியில் போத்தல் 45 ரூபாவாகவும், இணுவில் புகையிரத நிலையத்திற்கு அருகில் போத்தல் 40 ரூபாவாகவும் மண்எண்ணெய் விற்கப்படுகிறது. [த 154]

## ப. நோ. கூ. ச. தலைமையகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், மே 2

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தின் தலைமைக் காரியாலயம் தற்போது யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ். ப. நோ. கூ. ச. கட்டடத்தின் மேல் மாடியில் தற்காலிகமாக இயங்கி வருகிறது. [இ-த]

## இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளில் திருட்டு

புளியங்கூடல், மே 2

இராணுவ நடவடிக்கைக்கு அஞ்சி பயந்து வெளியேறிய தீவுப்பகுதி மக்களின் வீடுகளில் திருட்டுக்கள் இடம் பெறுகின்றன.

யாழ்ப்பாணத்துக்கு அகதிகளாக வந்த சிலர் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற சமயம் தமது கால்நடைகள் மற்றும் பொருள்களைக் காணாது அதிர்ச்சி அடைந்தனர். [இ-125]

## தென்மராட்சியிலும் தீவுப்பகுதி அகதிகள்

தென்மராட்சி, மே 2

தீவுப்பகுதி, காரைநகர் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்துள்ள பலர் தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள தமது உறவினர் வீடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்களில் சிலர் தமது குடும்ப அங்கத்தவர்களைப் பிரிந்த நிலையில் காணப்படுகின்றனர். [இ-117]

# படையினரை ஊக்குவித்த பதாகைகளை காணவில்லை

## எங்கே என ஹமில்டன் கேள்வி

கடந்த ஆண்டு வடக்கு கிழக்கு சண்டை ஆரம்பமான போது தென்பகுதியில் ஆயுத படையினரை உற்சாகப் படுத்தும் பதாகைகள் (banners) காணப்பட்டன. ஆனால் அந்தப் பதாகைகள் இப்போது எங்கே மறைந்துவிட்டன?

—இப்படி இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க கேள்வி எழுப்பினார்.

"போர் முனையில் நின்று சண்டையிடும் படையினரை உற்சாகப் படுத்தவேண்டும். சண்டை ஆரம்பமானபோது காட்டப்பட்ட உற்சாகம் இப்போது தென்பகுதியில் இல்லையே!" என்று தளபதி வணசிங்கா கவலையுடன் கூறினார் என்று "சண்டே ஒப்சேர்வர்" தகவல் வெளியிட்டது. [உ-ச]

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 24 - 04 - 1935

மறைவு: 05 - 05 - 1988

திதி: 02 05-1991

## பொ. செந்தில்வேல் (செந்தில்)

தூரத்தை அறிந்ததில்லை
துன்பத்தை புரிந்ததில்லை
வேதனையை உணர்ந்ததில்லை
இவையெல்லாம் உங்கள் பிரிவால்
வந்ததுவே இன்று எமக்கு

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, பிள்ளைகள்,
மருமகள்.

71, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். [16650]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் கந்தையா தம்பிராஜா

அன்னையின் மடியில்: 23-7-1927
ஆண்டவனின் அடியில்: 2-4-1991

அன்பின் சுடராய் ஆசையின் திருவுருவாய் பாசத்தின் பின்னலாய் இருந்து எம்மையெல்லாம் வழி நடத்தி எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு சென்று விட்டீர்களே ஐய! நாம் மண்ணில் உள்ளவரை உங்கள் நினைவு எம்முடன் இருக்கும். உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி: தங்கம்மா மகள்மார்:
ரஞ்சனா [ஜேர்மனி], லலிதா [பிரான்ஸ்].
சுசிலா, யமுனா [பிரான்ஸ்] மருமக்கள்மார்:
சிவப்பிரகாசம், குலேந்திரன். பேரப்பிள்ளைகள்:
சிந்து, குனிந்...

11, சிறாம்பியடி வீதி,
யாழ்ப்பாணம். [15..7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம்
தாவடி

நூல் வெளியீடு:

# "பாபா சொன்ன கதைகள்"

இடம்: நிலைய மண்டபம்
பிள்ளையார் கோவிலடி, தாவடி.

காலம்: 04-05-1991 சனிக்கிழமை மாலை 3மணி

அனைவரும் கலந்து கொள்க!

நூலின் விலை ரூபா 25/-

[16649] [இருபத்தைந்து]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 1969 - 02 - 05

இறப்பு: 1990 - 05 - 14

## செல்வி குலசிங்கம் தனலஷ்மி

[யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலை பழைய மாணவி]

அன்புச் செல்வமே அருமைக் குலவிளக்கே
நீ எமக்கு விடை கொடுத்து இன்றுடன் ஓராண்டு ஆகுதம்மா;
நேற்றைய கனவு போல நினைவில் எமக்கு ஆற்றாது அழுகின்றோம்
ஆலமரமாய் நின்ற உன் அப்பா மனதில் நீங்காது நின்றாய்
உனது தாயின் மனதை கலங்க வைத்து
உற்றார் உறவினரை உருக வைத்தாய்
உனது முகம் காணாது நின்று கலங்குகின்றோம்.
உனது உருவப்படம் முன் உருகி அழுகின்றோம்.
எங்கள் எல்லோர் நெஞ்சமும் உனை மறந்து வாழாது
எமை தேற்ற நீ இங்கே ஓடி வரமாட்டாயா?

உனது பிரிவால் வாடும்;
பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

கே. கே. எஸ் வீதி,
[மனோகரா தியேட்டர் முன்பாக] [16537]

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 03 05-197

விண்ணில்: 19 03-1991

## அமரர் நாகலிங்கம் கனகரஞ்சன்

(அம்பி)

[ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, உயர்தர வகுப்பு மாணவன்]

அந்நியர் பிடியினில் சிக்கிய மண்ணை
மீட்டிடச்சென்றவர் போதாதென்றோ
உன்னிய நீயும் சென்றங்கெதிரியை
ஓட்டிட முனைந்த வேளையில்
பின்தியே நின்று புறமுதுகுதன்னை
காட்டிடாது எதிர்ப்படையின்
முந்தியே சென்று மார்பில் குண்டேற்றி
நாட்டிற்கும் வீட்டிற்கும் புகழ் தந்த
அம்பியே உன்னை எண்ணி நாமும்
ஆறிடாத்துயர் கொண்டோமிங்கே.

உமது பிரிவால் வாடும்:
நண்பர்கள்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர். [16645]

## மக்கள் இடம்பெயர்வு

புங்குடுதீவு, மே 2

ஊர்காவற்றுறை, வேலணைப் பகுதிகளில் தற்போது இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக புங்குடுதீவில் இருந்தும் பெரும் எண்ணிக்கையானோர் இடம்பெயர்ந்து வருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை பிற்பகல் முதல் இவர்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர் என்றும் இவர்களில் பெரும்பாலானோர் யாழ். நகரப் பகுதிக்கு வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை ஹெலி ஒன்று கேரதீவு, ஊரதீவு, மடத்துவெளி, பழையதுறைப் பகுதிகளில் நீண்ட நேரம் சுற்றியதும் மக்கள் பதற்றம் அடைந்து வெளியேறக் காரணமாக அமைந்தது. [இ-131]

## மருந்துக்கு தட்டுப்பாடு

கொழும்புத்துறை, மே 2

சித்த ஆயுர்வேத இலவச வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. [இ-30]

## வடக்கில் பெருமளவு கௌபி விளைச்சல்

மானிப்பாய், மே 2

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகமான இடங்களில் தற்போது கௌப்பி பயிரிடப்பட்டுள்ளது.

கௌப்பி பல இடங்களில் கொடி விட்டு வளர்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

எனவே கௌபி பயிரை கொடியாக படர விடாது அவற்றின் நுனிகளைக் கிள்ளி விடுமாறு யாழ்ப்பாண மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. கே. குணரத்தினம் ஆலோசனை கூறி உள்ளார்.

யாழ்ப்பாண விளை நிலங்களில் அதிக பசளைத் தன்மை காணப்படுவதால் தான் கௌபி கொடிவிட்டுப்படருவதாகவும், கொடிவிட்டுப் படர்ந்தால், எதிர்பார்க்கப்படும் பலனைப் பெற முடியாது போகலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ 90]

## நவீன ஓவியக் கருத்தரங்கு

குருநகர், மே 2

ஈழத் தமிழரின் ஓவியக் கலைகள் உலக நாடுகளில் பரவும் வகையில் அவை மண் வாசனையைப் பிரதிபலிக்க வேண்டும்.

யாழ். திருமறைக் கலாமன்றம் ஒழுங்கு செய்திருந்த நவீன ஓவியம் பற்றிய கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு: சோ. கைலாசநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

ஓவியர் அ. மாற்கு தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கின் இறுதியில் செல்வி பட்சி நன்றி தெரிவித்தார். [இ-51]

## ப.நோ.கூ.ச. கிளையில் திடீர் சோதனை

நவாலி, மே 2

விலைக்கட்டுப்பாட்டதிகாரிகள் நவாலி ப. நோ. கூ. சங்கக் கிளையில் திடீர் சோதனை நடத்தினர்.

யாழ். செயலக விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த திரு. ஜே. கமலநாதன், திரு. பி. சிதம்பரநாதன் ஆகியோர் மேற்கொண்ட இப் பரிசோதனையின் நிவாரணத்துக்கு வழங்கப்படும் இலவச உலர் உணவு நிவாரணப் பொருள்களின் நிறைகள், அவற்றுக்குப் பயன்படுத்தப்படும் படிகள், தராசுகள் என்பன நன்கு பரிசீலனை செய்யப்பட்டன. [இ-100]

# உதயன்

## தொழிலாளருக்கு கல்வி வசதி

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், மே தினமான நேற்று தனது கல்விப் பணியில் புதிய அத்தியாயம் ஒன்றைப் புரட்டியது. பல்கலைக்கழகத்தின் கல்வியியற்துறையின் அங்கமாக, தொழிலாளர் கல்வித் திட்டப்பிரிவு நேற்று உத்தியோகபூர்வமாகத் தொடக்கி வைக்கப்பட்டது.

தொழிலாளர்கள், அவர்கள் எந்தத் தொழிலைச் செய்பவராயினும் சரி, ஒரு சமூகத்தின் பிரதான அங்கம். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்பு மட்டுமன்றி, அரசியல் முன்னேற்றத்திற்கும் அவர்களின் பங்கு பிரதானமானது. மனித வாழ்க்கையில் எல்லாத்துறைகளிலும் அவர்களின் பங்களிப்பு அத்தியாவசியமாகின்றது.

தொழிலாளர்களை கீழ்மட்டத்தில் வைத்துப் பார்க்காது, ஏனையவர்களுடன் அந்தஸ்தில் உயர்த்தி, சம உரிமைகளும், சமத்துவமும் வழங்கும் போக்கு இப்போது உலகில் பரந்து வளர்ந்துள்ளது. தொழிலாளர் கல்வி அறிவில் உயர்ந்து, சமூகத்துக்கு மிக உச்சமான சேவையை நல்ல பல நாடுகளிலும் வாய்ப்புக், வசதிகளும் உள்ளன.

தமிழ்ப் பிரதேசத்தில் அவ்வாறான வசதி எதுவும் இதுவரை இல்லை. இப்போதுதான் ஆரம்பிக்கப்படுகிறது. அதுவும் உயர்கல்வி பீடமான பல்கலைக்கழகம் இந்தச் சமூகப் பணியில் இறங்கியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

தொழிலாளர்களின் கல்வி, செயற்திறன் ஆகிய இரண்டையும் வளர்த்து உயர்த்துவதே தொழிலாளர் கல்வி நெறியின் நோக்கமாகும். அதனைச் சரிவரச் சீராகச் செய்தால் சமூக வளர்ச்சிக்கு அது பெரிதும் உறுதுணையாக அமையும்.

எமது தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கல்வி நெறி, எமது மூலவளங்களைத் தக்கபடி பயன்படுத்தி பொருளாதார சுபீட்சத்துக்கு வழிகோலுவதாக அமைய வேண்டும்.

அத்தோடு எமது சமுதாயக் கட்டமைப்பில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு வித்திடும் வகையில், தொழிலாளர்களின் அறிவுத்திறனை வளர்த்து, அதன் மூலம் தமிழ்ப் பிரதேச முன்னேற்றத்துக்கு உழைக்கும் சமூக உணர்வை வளர்க்கும் விதத்திலும் அமைய வேண்டும்.

அவ்வாறில்லாமல் வேறு நாடுகளில், அல்லது வேறு பிரதேசங்களில் கைக்கொள்ளப்படும் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வெறும் சான்றிதழ்களை வழங்குவதால் ஆகப்போவது ஒன்றுமில்லை.

எமது தேவைக்கு வளர்ச்சிக்கு உதவும் விதத்தில் எங்களுக்கென புதிய திட்ட அடிப்படையில் தொழிலாளர் கல்வி நெறி வகுக்கப்படுவதே சிறப்பு. இது விடயத்தில் யாழ். பல்கலைக் கழகம் உரிய பொறுப்புடன் செயற்படும் என்று நம்பலாம்.

விவசாயம், பனைத் தொழில், மீன்பிடி ஆகிய பிரதான பொருளியல் வளங்களைச் சார்ந்த தொழில்களிலும், ஏனைய தொழில் நுட்ப, நவீன தொழில் நுணுக்கங்களிலும் தொழிலாளர்களுக்கு பயிற்சி போதனை நடத்தப்படுவது அவசியம். அவற்றில் சேர்ந்து தமது அறிவையும், செயற்திறனையும் பெருக்கித் தமக்கும், தமிழ் மண்ணுக்கும் உதவ தொழிலாளர்கள் முன்வர வேண்டும்.

# கடனுதவி பெறுவதற்காகவே.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கப் போராடுகின்றோம் நம் இனத்தால் மொழியால், கலாசார வாழ்வால், வரலாற்றால், தனித்துவமானவர்கள்.

நாம் எமது சொந்த நிலத்தில் தலை நிமிர்ந்து வாழ ஆசை கொண்டுள்ளோம்.

போராடி, போராடி உறுதி பெற்ற எங்களின் கரங்களில் ஒரு நாள், இந்த தேசத்தின் கொடி பட்டொளி வீசிப் பறக்கும் சுதந்திர மனிதர்களாக விடுதலை அடைந்த எங்கள் வீதிகளின் வழியே நாங்கள் அணிவகுப்போம். இது தவிர்க்க முடியாதது.

ஏனெனில் எங்கள் இதயங்களில் விதைக்கப்பட்ட விடுதலை உணர்வானது வளர்ந்து விருட்சமாகி விட்டது.

கடந்த காலங்களில் எங்கள் தேசத்தின் மீது சுமத்தப்பட்ட சுமைகள் கடுமையானவை, தாங்க முடியாத துயரம் நிறைந்தவை. எமது வீதிகளிலும், வீடுகளிலும் குண்டுகள் வீசப்பட்டன, தொழிலுக்கோ தொழிலகங்களுக்கோ செல்ல முடியாத நிலை, எமது தேசம் பொருளாதார முற்றுகையிடப்பட்டது. நாம் நெருக்கப்பட்டோம், எமது குரல்வளை நெரிக்கப்பட்டது.

கடலெங்கும் இருந்த கடற்படையினர் — தொழிலுக்குச் செல்லும் எமது மீனவர்களை கடலுக்கு இரையாக்கினார்கள். வயல்களுக்குச் சென்ற பல தமிழர்கள் உரமாகிப் போயிருக்கிறார்கள் எல்லாத் தொழிலுக்குமே அடிப்படையான எரிபொருளும், மின்சாரமும் தடை செய்யப்பட்டன. விவசாய உற்பத்திக்குத் தேவையான, அடிப்படை மூலப் பொருள்களும் தடைசெய்யப்பட்டன.

நாம் அழிந்து விடுவோமா அல்லது தப்பிப் பிழைத்துவிடுவோமா என்ற கேள்வி உலகில் எழுந்தது எம்மிடமிருந்ததெல்லாம் சுதந்திர உணர்வும் — மனவைராக்கியமும் மட்டும்தான். தம்மீது விதிக்கப்பட்ட எல்லாவற்றிற்குமாக தமிழர்கள் போராடினார்கள்? இராணுவ முகாம்களின் வாசலிலும் — காடுகளிலும், எல்லைகளிலும், — ஆக்கிரமிப்பை அகற்றுவதற்காகப் போராடினார்கள். வயல்களிலும், கடலிலும் வாழ்வதற்காகப் போராடினார்கள்?

இப்படி எங்கும் போராட்டம் தொடர்ந்தது. தமிழீழ தேசத்தின்மீது இடப்பட்ட பொருளாதார அழுத்தத்திற்கு — உள்ளாகவும், தமிழீழ தேசத்தவர்கள் தலை நிமிர்ந்தார்கள் தமது சொந்தக் காலில் நிற்க வெளிக்கிட்டார்கள், சொந்தப் பொருளாதார வாழ்வை ஏற்படுத்த விழைந்தார்கள்.

### விழிப்படைய வைத்தது

சிங்கள அரசு எம்மீது விதித்த பொருளாதாரத் தடை. எம்மை, சுயமாகவும் — சனித்துவமாகவும் வாழ வழி வகுத்தது. தங்கு நிலையற்ற பொருளாதார வாழ்வுக்கு வழி செய்தது! இந்நடவடிக்கை தமிழீழத் தொழிலாளர்களை விழிக்கச் செய்தது.

இங்கு கடலெனத் திரண்டிருக்கும் மக்களின் — தொழிலாளர்களின் சக்தி உலகத்திற்கு பலவற்றைப் பிரகடனப்படுத்துகிறது. நாங்கள் சுதந்திரத்தையும் — விடுதலையையும் உயிரைவிட உயர்வாக நேசிக்கின்றோம் என்பதைக் காட்டுகிறது. அதே நேரம் தமிழீழத்தவர்களின் பிரதிநிதிகள் புலிகள் தான் என்பதையும், தெட்டத்தெளிவாக காட்டிநிற்கிறது. இன்று இங்கு வந்தவர்கள் ... மக்களின் உணர்வுகளைத்தான் பகிர்ந்து கொண்டவர்கள் — இதனை உணர்ந்து கொள்வீர்கள் என நான் நினைக்கின்றேன்.

அண்மையில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர், புலிகள் சனநாயகரீதியில் — தாங்கள் தமிழர்களின் பிரதிநிதிகள் என்பதை நிரூபிக்க வேண்டும் எனக் கேட்டிருந்தார்.

ஓர் இனத்தின் சுதந்திர தாகத்தையும் - அடக்குமுறைக்கு உள்ளாகி - ஒடுக்கப்படும் மக்களின் இதய உணர்வுகளையும், விளங்கிக் கொள்ள முடியாத இவர்கள், ஜனநாயகத்தைப் பற்றி போதனை செய்வது விசித்திரமானது

இந்திய ஜனநாயகத்தைப் பற்றியும், தேர்தல் தாற்பரியங்களைப் பற்றியும்-நாங்கள் நன்றாகவே அறிந்துள்ளோம். இந்திய அரசு இந்த மண்ணிலும் ஒரு தேர்தலை நடத்திக் காட்டியிருந்தது. அந்தத் தேர்தல், இந்திய ஜனநாயக முறை எப்படிப்பட்டதென, எம் மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது

இந்தியத் தூதுவரை நாமும் சில கேள்விகள் கேட்கலாம். இந்தியாவின் இன்றைய பிரதமர் எத்தகைய ஜனநாயக வழியில் ஆட்சிக்கு வந்தார்?

இந்தியாவின் பெரும் எண்ணிக்கையான மக்கள் இவருக்கும் - இவரின் இட்சியத்திற்கும் வாக்களித்தார்களா? என்று கேட்கலாம்.

தமிழ் நாட்டில், பெரும்பான்மையான மக்களால் தெரிவு செய்யப்பட்ட, தமிழ்நாடு அரசு, எத்தகைய வழிமுறைகளில் கலைக்கப்பட்டது என்பதையும் கேட்கலாம்,

இவற்றிற்கு அவரிடம் பதில் இருக்காது!

### இங்கு வந்திருந்தால்

இந்தியத் தூதுவருக்கு, தமிழ் மக்களின், போராட்ட சக்தி யார் என்பதை அறியும் ஆவலிருந்தால், அவர் இன்று இங்கு வந்திருக்கலாம். உணர்வால், இதயத்தில் ஊறியிருக்கும் விடுதலைப் பற்றால், அழிவையும் - ஆபத்தையும் எதிர்பார்த்தபடி அவற்றை ஏற்றுக் கொள்ளும் மனவலையுடன், இங்கு வந்திருக்கும் இந்த மக்கள் கூட்டத்தை பார்த்திருந்தால், அவருக்கு நிலவும் சந்தேகம் நீங்கியிருக்கும்.

இந்திய அரசு இராணுவ ரீதியிலோ அரசியல் ரீதியிலோ எமது தேசத்தில் தலையீடு செய்வதை நாம் விரும்பவில்லை. இந்திய அரசினர் ராஜதந்திர ரீதியில்-தமிழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டு எடுக்கும் முயற்சிகளை நாம் வரவேற்கின்றோம்.

தமிழீழ மக்களின் நலனை, நல்வாழ்வை, பாதுகாப்பை உறுதிப்படுத்தும் எந்தத் தீர்வைப் பற்றியும் பேசுவதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம்.

நாம் இந்த வருட ஆரம்பத்தில் சமாதானத் தீர்வுக்கான — பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கினோம். அதன் விளைவாக யுத்தநிறுத்தம் ஒன்றையும் கடைப்பிடித்தோம் மாங்குளத்திலும் - கொட்டையிலும் இராணுவ வீழ்ச்சியடைந்திருந்த ஸ்ரீலங்கா அரசு அந்த நிலையில் பேச்சுவார்த்தைக்கு வரத் தயாராக இருக்கவில்லை.

இராணுவ மேலாதிக்க நிலையிலிருந்து கொண்டு, பேச்சுக்களை நடத்தலாமென ஸ்ரீலங்கா அரசு எண்ணுகிறது. இதனால், எம்மீது புதிய அழுத்தங்களையும், ... ஸ்ரீலங்கா அரசு தப்புக்கணக்குப் போடுகிறது.

ஸ்ரீலங்கா அரசின் இந்த இராணுவவாத நிலையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது, சர்வதேச சமுதாயமும் இதனை விளங்கிக்கொள்ள வேண்டும்.

இன்று ஸ்ரீலங்கா அரசிற்கு, தமிழர் மீதான யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு பெருமளவு நிதி தேவைப்படுகிறது. பொருளாதார அழிவின் விளிம்பில் நிற்கும் ஸ்ரீலங்கா அரசு இந்நிதியை சர்வதேச நாடுகளிலிருந்தே பெறுகின்றது. நாட்டின் அபிவிருத்தி என்ற போர்வையில் பெறப்படும் இந்த நிதி தமிழினத்தின் அழிவிற்கே பயன்படுத்தப்படுகிறது.

இந் நிலையில் அன்னியக் கடனுதவிக்காக, பேச்சுவார்த்தை என்றும் சமாதானத் தீர்வென்றும், ஸ்ரீலங்கா அரசு வேஷம் போடுகிறது. ஸ்ரீலங்கா அரசால் நாட்டில் சமாதானம் நிலவுகிறது என தோற்றப்பாடு காட்டப்பட்டு பெறப்படும் இப்பணம் நாளை தமிழர்களின் இன அழிவுக்காக பயன்படும் இதில் எமக்கு சந்தேகமில்லை இதனை சர்வதேச நாடுகள் உணர்ந்து கொள்ள வேண்டும்

### விடுதலைப் பாதையில்

அதே நேரம் புலிகள் இயக்கம் பலம் பொருந்திய நிலையிலிருந்து பேச்சுக்களை நடத்துவதும், தமிழரின் தன்னாட்சி உரிமைக்கு, சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தை தேடுவதும், விடுதலைப் போராட்டத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் என நாம் கருதுகின்றோம்.

இன்று தமிழீழத்தின் தென் முனையைச் சேர்ந்தவர்கள் தமது தொழில் வாழ்வு சொத்து, சுகம் எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாக நிற்கிறார்கள்.

அவர்களும் ஒரு கிராமத்தில் தனி நிலத்தில் வாழ்ந்தவர்கள். தனித்துவமாகவும் கௌரவத்தோடும் வாழ்ந்தவர்கள் இன்று சாலைகளிலும், முகாம்களிலும் அகதிகளாக வாழ்கிறார்கள்.

இது தென்தமிழீழத்தவர்களுக்கு மட்டும் விதிக்கப்பட்ட வாழ்வல்ல. தமிழீழ தேசத்தின் ஒட்டு மொத்த நிகழ்ச்சி தமிழீழமெங்கும் தமிழர்கள் வர்க்க வேறுபாடற்று அழிக்கப்பட்டார்கள்; அழிக்கப்படுகிறார்கள்.

தமிழீழ தேசத்தில் தொழிலாளர்களின் வாழ்வோ, மக்களின் வாழ்வோ இந்த மண்ணின் விடுதலையின் பின்புதான் சாத்தியமாகலாம். இது இந்த மண்ணின் நீண்ட போராட்ட வரலாறு கற்றுத் தந்த பாடம்.

தமிழீழ தேசத்திற்கு இன்று தேவையெல்லாம் விடுதலையும், சுதந்திரமும்தான் மரணத்தின் வாசலில் நின்று கொண்டு மரணம் எடபோதும் வரலாம் என்பதை ஏற்றுக்கொண்டு போராடும் தமிழீழ இளைஞர்களே, இன்று தமிழீழ அன்னைக்குத் தேவைப்படுகிறார்கள்

இழப்புகளும், துன்பங்களும் தான் விடுதலைப் போராட்டத்தின் நியதி, தமிழீழ தேசத்தில் நடக்கும் நியாயமான — தருமத்துக்கான போராட்டம் — ஒரு நாள் வெற்றிபெறும்.

வர்க்க வேறுபாடற்ற, சமத்துவமான சமூக அமைப்பையுடைய தமிழீழ தேசம் தோற்றம் பெறும்.

புலிகள் வரலாறு படைப்பார்கள்:

வீரமும், விடுதலை உணர்வும், உலகம் வியக்கும் தியாக வாழ்வும், உலகின் வரலாற்றில் — தமிழர்களை உயர்வாகப் பொறிக்கும்.

இப்படி அவர் கூறினார்.

[இ-5-3]

## யாழ். இந்து அதிபருக்கு பிரிவுபசாரம்



யாழ்ப்பாணம், மே 2

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடந்த பதினொரு மாதங்களாகப் பணிபுரிந்த திரு. சே. எஸ். குகதாசனுக்கு, கல்லூரி பழைய மாணவர் சங்கம் பிரிவுபசாரம் ஒன்றை நேற்று நடத்தியது

யாழ். இந்துவின் பழைய மாணவரான திரு குகதாசன் முன்னர் பன்னிரண்டு வருடங்கள் அங்கு ஆசிரியராகப் பணி புரிந்தார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபராக நீண்டகாலம் பணியாற்றிய பின், தேசியக் கல்லூரியான யாழ் இந்துவின் அதிபர் பதவியை ஏற்றார்.

அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான முதுமாணி பட்டதாரியான இவர் இலங்கை விஞ்ஞான மன்றத்தின் நன்கு கட்டுரைகள் வாசித்துக் கௌரவம் பெற்ற இரண்டு தமிழர்களில் ஒருவராவர்

''சஞ்சீவி'' உட்பட தமிழ்ப் பத்திரிகைகளில் மாணவர்களுக்குப் பயன்தரும் விஞ்ஞானக் கட்டுரைகளையும் இவர் எழுதியிருக்கிறார்.

## குமண வந்தது

யாழ்ப்பாணம், மே 2

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த ''குமண'' கப்பலில் கொழும்பில் சிகிச்சை பெற்று வந்த 26 நோயாளர்களும் வந்தனர்.

## அவர்களின்..

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வார்த்தை தேவைப்படுகிறது. அதற்கு நாம் தயாரில்லை

சிங்கள மொழியை அரச கரும மொழியாகக் கொண்டு வந்ததால் தான் பிரச்சனை எழுந்தது என்று ஜனாதிபதி கூறுகிறார். அவர் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தான் மலையகத்தவரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. சிங்களக் குடியேற்றம் இடம்பெற்றது. தமிழரின் சொத்துக்கள் அழிக்கப்பட்டன

சிங்களத் தலைவர்கள் ஒவ்வொருவரும் மாறிமாறி அடுத்தவர் மீது குற்றம் சுமத்திக் கொண்டிருப்பார்கள் ஆனால் உண்மையில் இரு கட்சியின் நோக்கமும் தமிழினத்தை அழிப்பதுதான்.

எமது இயக்கம் மாலை வாங்கி வாக்குக் கேட்கும் அமைப்பு அல்ல. அன்றைய தலைவர்கள் மேடைக்கு வந்து மாலையை வாங்கி, வாக்குகளைப் பெற்று தமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர். நாம் கண்ணீர் மாலைகளைத் தான் இன்று பெறுகிறோம்

இன்று போராளிகள் 24 மணிநேரமும் போராடுகிறார்கள் அவர்கள் சம்பளம் கேட்கவில்லை. ஓய்வு கேட்கவில்லை. உங்கள் பங்களிப்பைத் தான் கேட்கிறார்கள்

உங்கள் பூரண பங்களிப்புக் கிடைத்தால் விரைவில் எங்களுக்கு விடிவு கிடைக்கும். புலிக் கொடிகள் பறக்கும் — என்று கூறினார். [அ3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒடுக்கப்படுவதைப் பிரகடனப்படுத்த மேதினத்தைப் பயன்படுத்துவோம்

## பாலகுமாரன் பேச்சு

யாழ்ப்பாணம், மே 2

ஈழத்தில் தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள் என்பதை, உலக மனித சமுதாயத்துக்கு பிரகடனப்படுத்தும் நாளாக மேதினத்தை மாற்ற வேண்டும்.

நல்லூரில் நேற்று நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பேசுகையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு வே. பாலகுமாரன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

உழைத்தவர்கள் உரிமை கேட்கும் தினமான இன்று எம்மைப் பொறுத்தவரையில் எமது உரிமைக்காகக் குரல் கொடுக்கும் தினமாகக் கொள்ள வேண்டும்.

கொழும்பில் இரு அணியாக தொழிலாளர்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் களியாட்ட விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

ஈரோஸ் அமைப்பு வர்க்க ரீதியான இடதுசாரிக் கொள்கையைக் கொண்டு இயங்கியது என்று மக்கள் கருதுகிறார்கள். அந்தக் கொள்கையுடன் செயற்பட்ட அமைப்பு, இன்று விடுதலைக்காகப் போராட்டத்தில் இணைய வேண்டி வந்தது நாம் விட்ட தவறுகளை உணர்ந்து புதிய பாதையில் செல்ல வேண்டிய காலம் வந்து விட்டது — என்றார். [ஒ-அ-3]

# மே தின சுலோகங்கள்

யாழ்ப்பாணம், மே 2

நேற்று நடைபெற்ற மேதினப் பேரணியில் எடுத்துச் செல்லப்பட்ட சுலோகங்கள் சில:

★ உலகத் தொழிலாளர்களே! ஒடுக்கப்பட்ட தேசங்களே!! ஒன்று சேர்வீர்!!!

★ தொழிற்சாலைகள் நிறுத்திட, வயல் வெளிகள் மீட்டிட, தமிழீழப் போரிலே விரைவுடன் குதித்திடுவோம்!

★ உழைப்பவன் கைகளில் அதிகாரம் ஏறிட சமதர்ம தமிழீழம் நிஜமாக மலரட்டும்!

★ சர்வதேசமே உன் அறிவுக் கண்ணை விழித்துப்பார்! போதுமடா தரியும் தமிழீழ சிசுவின் வீரத் துடிப்பு!

★ பதுக்கலையும், ஊழலையும் அழித்து ஒழிப்போம்! ஊழலற்ற நிர்வாகத்தை ஆட்சியில் ஏற்றுவோம்!!

★ மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திரும்ப இயக்கிடுவோம்!! எரிக்கப்பட்ட வயல் நிலங்களை மீள விதைத்திடுவோம்!!!

★ பொருளாதாரத் தடை என்னும் விலங்கினை ஏராக்கி உள்ளூர் உற்பத்தியை ஊக்கமுடன் பெருக்கிடுவோம்!

★ தேச நலனை மதிக்காத கல்வியைத் தூக்கி எறிந்து மிதித்துத் துவைப்போம்!

★ கிழக்கென்றும் வடக்கென்றும் எம்மை ஏய்க்க முடியாது! ஓரடி நிலந்தானும் நாம் இழக்க மாட்டோம்!!

[இ-90-5-3]

# நாரந்தனையில் சடலம்; நாய் கடித்துத் தின்றது

## நேரில் கண்டவர் தகவல்

யாழ்ப்பாணம், மே 2

நாரந்தனை கந்தசாமி கோவில் பக்கமாக உள்ள வீதியில் பெண் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் காணப்பட்டது அந்தச் சடலத்தை பல நாய்கள் இழுத்துப் புரட்டித் தின்று கொண்டிருந்தன.

சரவணை மேற்கு பகுதியில் வீட்டில் இருந்த வயதான ஒருவரை அழைத்து வர அங்கு சென்ற தம்பி திரவேலு இரத்தினம் என்பவர் இத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாரந்தனை பகுதியில் நான் சென்று கொண்டிருந்த போது திடீரென அப்பகுதியில் தோன்றிய படையினர் என்னைத் தம்முடன் வருமாறு கூட்டிச் சென்றனர்.

என்னிடம் இருந்த 420 ரூபா பணத்தை அவர்கள் பறித்தெடுத்துக் கொண்டனர். அதன் பின்னர் துப்பாக்கியாலும், தடிகளாலும் கண்டபடி—மிருகத்தனமான முறையில் தாக்கினர். எனக்கு கையில், கால்களில், தொடையில் காயங்கள் ஏற்பட்டன.

அதைத் தொடர்ந்து அவ்விடத்தில் இருந்து ஓடும்படி படையினர் பணித்தனர். நான் திரும்பி வந்து கொண்டிருந்தபோது பல வீடுகளும் உடைக்கப்பட்டு பொருள்கள் வீசப்பட்டிருப்பதை அவதானித்தேன்.

ஒரு வீட்டின் வாசலில் ஆண் ஒருவரது சடலத்தையும் கண்டேன்—என்றார். [ஓ-125]

## வுனியா..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

3 30 மணியளவில் ஓமந்தை ஓராம கட்டைப் பகுதியில் இரண்டு பொம்மர்கள், 2 ஹெலிகள் நடத்திய வானத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார். பொதுமக்களில ஒருவர் பலியானார் வேறு மூன்று பேர் காயமடைந்தனர்.

வலவன் [அவரவப் பெருமாள் பாலசிங்கம்—ஓமந்தை] என்ற போராளி வீரமரணமடைந்தார். [ -3]

# பழுகாமத்தில் 7 தமிழர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், மே 2

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டம் பெரிய போரதீவு, வெல்லாவெளி ஆகிய முகாம்களிலிருந்து வந்த இராணுவத்தினரும், ரெலோ குழுவினரும் பழுகாமத்தைச் சுற்றி வளைத்தனர். அங்கு ஏழு தமிழ்ப் பொதுமக்களை அவர்கள் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பழுகாமம் வாசிகளான சாமித்தம்பி ரவி [வயது 21- திருமணமானவர்], பழனித்தம்பி குணரத்தினம் [வயது 30— 4 பிள்ளைகளின் தந்தை], பழனித்தம்பி சந்திரப்பிள்ளை [வயது 28]— 2 பிள்ளைகளின் தந்தை], சந்தப்பிள்ளை உருத்திரமூர்த்தி [வயது 25 — ஒரு பிள்ளையின் தந்தை], சபாரத்தினம் திருநாவுக்கரசு [வயது 20], மாணவனான சிவராசா புஷ்பராசா [வயது 14] ஆகியோரும்—

பாண்டிருப்பு வயதியான சாமித்தம்பி வண்ணன் [வயது 17 ஆகியோருமே சுட்டுக் கொல்லப்பட்டனர்.]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், மே 2

மட்டக்களப்பு மாவட்டம், மகிழடித்தீவில் கடந்த திங்கட்கிழமை இராணுவத்தினருடன் நடந்த மோதலில் பரமானந்தன் [க. மனோகரன்— பழுகாமம்] என்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி வீரமரணமடைந்தார். [ஒ]

# தமிழ் மக்களின் உறுதியை பேரணி உணர்த்தியது-ராஜன்

சோதனைகள், வேதனைகள் ஆகியவற்றின் மத்தியிலும் எமது மக்கள் உறுதியாக எம்முடன் நிற்கிறார்கள் என்பதை இந்தப் பேரணி உணர்த்தியுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ராஜன் நேற்றைய மேதினக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

அன்று திலீபன் நினைவுக் கூட்டத்தில் கூடிய மக்கள் வெள்ளம் போன்று இன்றும் கூடியுள்ளீர்கள்—

எமது தலைவர் பிரபாகரன் தலைமையில் தமிழ் மக்கள் இணைந்து நிற்கிறார்கள் என்பதை இன்றைய கூட்டம் எடுத்துக் காட்டுகிறது — என்று திரு. ராஜன் மேலும் கூறினார். [ஒ-3]

# தமிழீழ மக்களின் பங்களிப்பு உற்சாகம் தருகிறது -தினேஷ்

களத்தில் வீரத்துடன் நிற்கும் போராளிகளுக்கு உற்சாகத்தையும், உத்வேகத்தையும் தரும் வகையில் இன்றைய மேதினத்தில் தமிழீழ மக்களின் பங்களிப்பு இருந்தது. இது எங்கள் போராளிகளுக்கு புதிய உற்சாகத்தைத் தரும்.

நல்லூரில் நேற்று நடந்த மேதினக் கூட்டத்தில் யாழ் மாவட்ட தளபதி திரு. தினேஷ் இவ்வாறு கூறினார்.

அழிந்து கொண்டிருந்த தமிழினத்தை, வீரமிகு இனமாக உலகுக்கு காட்டி நிற்கும் இன்றைய போராட்டத்தை மக்கள் முழுமையாக ஆதரித்து நிற்கிறார்கள் என்பதை இந்தப் பேரணி உணர்த்தியுள்ளது.

இழந்த மண்ணை மீட்கும் இந்தப் போராட்டத்தில் மக்களும் இணைந்து போராடாமல் விட்டால் நிச்சயம் எமது இனம் அழிந்து போய் விடும்—என்றார். [ஒ-3]

# ஆசிரியர் சமூகம் புலிகளுடன் அணிசேர வேண்டும்-மகாசிவம்

''தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழரின் ஏகோபித்த பிரதிநிதிகள். ஆசிரியர் சமூகம் அவர்களுக்குப் பின்னால் அணி திரள வேண்டும்''.

— இப்படி அறைகூவல் விடுத்தார் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம்.

நல்லூரில் நேற்று நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

''எமது மண்ணுக்கு ஏற்றவாறு கல்வித்திட்டம் மாற்றப்படவேண்டும். தற்போதைய கல்வித் திட்டம் மண்ணை நேசிக்கும் கல்விமான்களை உருவாக்கவில்லை வெளிநாடுகளுக்குப் பயன்படக் கூடியவர்களையே உருவாக்குகிறது— என்றார். [ஒ-3]

# திருமலை காட்டில் சண்டை

திருகோணமலை காட்டுப் பகுதியில் நேற்று நண்பகல் முதல் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடவானை கடற்படை முகாம் மற்றும் மங்கிபிரிட்ஜ் [குரங்குப் பாலம்], பாலம்போட்டாறு, வேப்பங்குளம், 10 ஆம் கட்டை, பன்மதவாச்சி ஆகிய இராணுவமுகாம்களிலிருந்தும் நேற்றுக் காலை 10.30 மணியளவில் பல அணிகளாக வெளியேறிய சுமார் 300 இராணுவத்தினர் தம்பலகாமம் பகுதியில் விடுதலைப் புலிகளின் முகாமைச் சுற்றி வளைக்கும் நோக்குடன் முன்னேறினர்.


அவர்களை நண்பகல் 11.30 மணியளவில் காட்டுப் பகுதியில் வழிமறித்து விடுதலைப் புலிகள் தாக்கினர். தாக்குதல் தொடர்ந்த வண்ணம் இருந்தது.

முதலில் இடம்பெற்ற தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அவர்களிடமிருந்து சில ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

## ஆனையிறவில் குண்டு வீச்சு

நேற்றுக் காலை 10 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமில் நான்கு ஹெலிகள் இறங்கி ஏறின. ஹெலிகள் இறங்கி ஏறுவதற்கு வசதியாக முகாமைச் சூழவுள்ள பகுதியில் மூன்று குண்டு வீச்சு விமானங்களும் அவ்ரோ விமானம் ஒன்றும் கடும் குண்டு வீச்சு நடத்தின



நேற்றைய மேதினப் பேரணியில் மேலும் சில கட்டங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org